1991, செப்டம்பர் 17]

44— கோமுகி அணையை உயர்த்திக்கட்டுதல்.

*1188—திரு. ஆர். பி. பரமசிவம் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் கோமுகி அணையின் நீர்ப் பிடிப்பை அதிகரிப்பதற்கு அணையை உயர்த்திக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சின்னசேலம் தொகுதியில் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்ற முறையில் கோமுகி அணை மட்டும்தான் இருக்கிறது. அது ' எர்த்தர்ன் டாம்' —மண்ணால் கட்டப்பட்ட டாம். பார்ஷியலி பிரிக் டாம். இந்த அணையில் கடந்த 3 ஆண்டுகளாக நல்ல மழை இல்லாததால், அதன் மூலம் பயன்பெறும் ஆயக்கட்டுகளுக்குக் கூட சரிவர தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அந்த அணையின் உயரத்தை உயர்த்தினால் அங்கே 'மினிமம் வாட்டர் லெவல்' என்று குறிப்பிட்ட அளவுக்கு தண்ணீரை தேக்கி வைக்க முடியுமென்று பொறியியல் நிபுணர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு தண்ணீர் அளவை அதிகரிக்க முடியும். அதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊறுவதற்கு வசதி இருக்கும். அதே நிலையில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். ஒரு அணை கட்டினால் இதெல்லாம் இருக்குமென்று எல்லோருக்கும் தெரியும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : அந்த அணையை உயர்த்துவதால் ஏற்படும் பலனைச் சொல்கிறேன். அந்த அணையை உயர்த்துவதால் அங்கேயுள்ள விவசாயிகளுக்கும், குடிநீர் பிரச்சினைக்கும் ஒரு வழி பிறக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அணை உயர்த்தும் திட்டத்தை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற கோமுகி அணையின் கொள்ளளவு என்பது 560 மில்லியன் கன அடியாகும்.

ஆனால், தற்போது இருக்கிற நீர் மட்டத்தின் கொள்ளளவு 105 மில்லியன் கன அடியாக இருக்கிறது. புதிதாக அணை கட்டுகிற நேரத்தில் வருகிற நீர் வரத்து தன்மையின் அளவைப் பொறுத்துத்தான், புதிதாக அணைகள் கட்டப்படுகின்றன. இந்த அணையைப் பொறுத்தவரையில் அதன் கொள்ளளவுக்குக் கூட நீர் வரத்து இல்லாததால் மேலும் இந்த அணையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மழைக் காலத்தில் அதிக நீர் வரத்துள்ள ஆறாகும். ஆகவே கடந்த மூன்றாண்டுகளில் வந்த தண்ணீரை மட்டும் வைத்து திட்டமிட முடியாது. ஆகவே, எப்படியிருந் தாலும் அந்த அணையை உயர்த்துவதால் எங்கள் பகுதி மக்க ளுக்கு பலன் கிடைக்கும் என்பதால் அடுத்த ஆண்டாவது இந்த அணையை உயர்த்தும் திட்டம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விபரங்களைத் தெரிவித்து இருக்கிறேன். இருந்தாலும், இன்றைக்கு அந்த அணையின் பாசனப் பரப்பு ஏறத்தாழ 5,060 ஏக்கருக்கு அந்த அணையின் மூலம் பாசனம் செய்யப்படுகிறது. கடந்த காலத் தில் பார்த்தால் தண்ணீர் வரத்து இல்லாததால் தான் விரிவு படுத்தும் திட்டம் இல்லையென்று நான் சொன்னேன். மழை அதிகம் வந்து தண்ணீர் அதிகம் பெருகுமானால் அதைப்பற்றி இந்த அரசு கவனித்து அடுத்த ஆண்டு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட பல அணைகள் தூர் எடுக்கப்படாமல் ஒவ்வொரு ஆண்டிலும் 10 அடி 15 அடி உயரத்திற்கு சில்ட் அடைத்துக் கொண்டிருக்கிறது. அதுபோன்ற நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அணை கள் உயர்த்திக் கட்டப்படுமா ? அல்லது படிந்திருக்கிற 10—15 அடி உயர மண்ணை தூர் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் படிந்து விடுவதால் அணையை உயர்த் திக் கட்டுவது என்பது சாத்தியமல்ல. ஏற்கெனவே மணல் படிந்திருக்கிறது என்று புகார்கள், குறிப்பிட்ட அணைகளில் இவ்

வாறு உள்ளன என்று புகார்கள் வந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதை உடனடியாக சீர் செய்து மேம்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 45. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

45—

பென்னகரத்தில் தொழிற்பேட்டை

*1065—டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதியில் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கடந்த 20 ஆண்டுகாலமாக இந்தப் பகுதிக்கு 'இல்லை' என்ற பதிலே வந்திருக்கிறது. அந்த மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்றும், பென்னாகரம் தொகுதி முழுவதும் மத்திய அரசாலும் மாநில அரசாலும் பின் தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், அடுத்த நிதி ஆண்டிலாவது இந்த பென்னாகரம் பகுதியில் தொழில் பேட்டை அமைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை பரிசீலனை செய்து தெரிவிக்கிறேன்.